தமிழர் நினைவேந்தல் அகவம் - சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil
www.maveerarnaal.ch trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவாக நடாத்தப்பெறும் பேச்சுப்போட்டி 2019

**11 வயதுப்பிரிவு**
(01.01.2008 – 31.12.2008 வரையில் பிறந்தோர்)

## தலைவர் மாமாவுக்கு அகவை அறுபத்தைந்து

பண்டைத் தமிழரின் பெரும்புகழைப் பாருக்குச் சொல்லிய வீரன் எங்கள் தலைவர் மாமா. தூங்கும் தமிழரைப் பறை கொண்டெழுப்பி, பகையை எதிர் கொண்டு முறியடிக்கப் போராடும் வல்லமையளித்த தீரர். மூவேந்தரும், ஈழத்தமிழ் வேந்தரும் நாட்டிய வீரத்தை, புலிக்கொடியேற்றி உலகுக்குச் சாற்றியவர் அவர்.

தரைப்படை, கடற்படை, வான்படை எனும் முப்படையோடு கரும்புலிப் படையும் அணிசேர நிமிர்ந்து நின்ற தமிழீழ இராணுவத்தின் தலைப்புலி. தமிழர் மனங்களில் நிறைந்துள்ள பேரொளி. வளர்ந்து நிற்பவருக்கும், வளர நினைப்பவருக்கும் வழிகாட்டும் நல்லாசான். அறத்தின் வழியில் தமிழர் மறத்தை, வாழ்வின் திறத்தைச் செதுக்கிய சிற்பி. புறநானூற்று வீர மரபு மீண்டும் புதுப்பிக்கப்பெற்ற வரலாற்றைத் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் மூலம் பதிவாக்கிய திறலோன் எங்கள் தலைவர் மாமா.

தமிழ் இனத்திலே ஆதரவற்று, அல்லலுற்று நின்றவர்களை அன்பால் அணைத்த ஆண்தாய் எங்கள் தலைவர் மாமா. பெற்றோரை இழந்த குழந்தைகளுக்காகச் சிறுவர் இல்லங்களை அமைத்தமை, தமிழீழத்திலே வாழ்ந்த முதியோர்களைக் காக்கின்ற மூதாளர் இல்லங்களை அமைத்தமை, மாற்றுத் திறனாளிகளை ஆற்றுப்படுத்தி அவர்களின் தனித்திறமைகளை இனங்கண்டு வளர்த்தெடுத்தமை, பெண்களுக்கான உளவள மேம்பாட்டு நிலையங்களை அமைத்தமை என்று அடுக்கிக்கொண்டே போகலாம்.

வையகத்தில் இவர்போல் ஒரு தலைவர் எமக்கு வாய்க்கவில்லையே என்று ஏங்குகின்ற இனங்கள் பல. தமிழரென்று தலைநிமிரும் போதெல்லாம் ‘மேதகு. வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் எங்கள் தலைவர்’ என்று மார்தட்டிக் கொள்கின்றோம். ‘அவர் வழிகாட்டலில் வாழ்கின்றோம்’ என்பதே எமக்கெல்லாம் பெருநிமிர்வு. நெருப்பாறுகளைக் கடந்தேறும் வல்லமை எங்கள் தலைவர் மாமா.

கொள்கையில் உறுதியும், சீர்நிறை ஒழுக்கமும், அன்பகலாத பண்பும், ஆய்ந்தறிந்த அரசாட்சித் திறனும் மிக்க எங்கள் தலைவர் மாமாவுக்கு அகவை அறுபத்தைந்து.

எமக்கான வாழ்வுரிமையைப் பெற்றுத்தரும் விடிவெள்ளி அவர். பல்லாண்டு வாழும் அவர் போர்ப்பரணி. ஆண்ட தமிழினத்தின் வரலாற்றை மனதில் இருத்தி, நாளை எமதாகும் தமிழீழத்தின் கனவு சுமந்து தலைவர் மாமாவை வாழ்த்தி மகிழ்கின்றோம்.

நன்றி,
வணக்கம்.